Registered as a News Paper        பக்கங்கள் 04        விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM        PEOPLES DAILY        மக்கள் தினசரி

நாதம் 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 27    (13-10-1991)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 237

## திறந்த பல்கலை. பற்றி உபவேந்தர் பேசுவார்

திறந்த பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை நிறுத்திவைக்க விடுக்கப்பட்ட உத்தரவு பற்றி அண்மையில் கொழும்பு சென்ற யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலந்தாலோசிக்கவுள்ளார். இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக வட்டாரங்களிலிருந்து தெரியவருவதாவது: அண்மைக் காலத்தில் இப் பல்கலைக்கழகத்துக்கும் பிரதம தலைமைக் காரியாலயத்துக்கும் இடையில் கடிதப் போக்குவரத்துகள் வெகுநாட்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு ஒன்று கிடைத்ததாகவும், இருந்தபோதிலும் இதனை நிச்சயப்படுத்த முடியவில்லை என்றும் கூறப்பட்டது. இதேவேளை அண்மையில் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தல் தற்போது சாத்தியமில்லை

# தமிழீழத்தின் அங்கீகாரமாக அது முடியும்

## அரசாங்க எம். பி. கள் மத்தியில் பிரேமா

(கொழும்பு)

தற்பொழுது பொதுத் தேர்தல் ஒன்று நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை. இந்நிலையில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தின் வடக்கு கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே நடத்தப்படவேண்டும். அப்படிச் செய்தால் வடக்கு-கிழக்கில் தானாகவே தமிழ் ஈழம் பிரகடனப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அரசாங்கப் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில்:

தற்பொழுது பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படின் அது வடக்கு, கிழக்கிற்குத் தமிழீழத்தைத் தானாக வழங்கியதாகவே அர்த்தமாகும். இதனால் வடக்கு, கிழக்கில் தேர்தலை நடாத்தவியலாது. பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படின் வடக்கு, கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே நடாத்தவேண்டும். அப்படிச் செய்தால் வடக்கு, கிழக்கில் தானாகவே தமிழீழம் பிரகடனப்படுத்தப்படும் என்று கூறினார்.

சில வாரங்களுக்கு முன்னர், எதிர்க்கட்சியினர் சபாநாயகரையும், தேர்தல் ஆணையாளரையும் சந்தித்து ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்காமலும், பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்தாமலும் இருக்க அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

திடீரென எதிர்க்கட்சிகள் தங்களது நிலையை மாற்றிக்கொண்டுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தற்போதைய பாராளுமன்றத்தில் சகல தரப்பினரதும் பிரதிநிதிகள் உள்ளனர். வடக்கு, கிழக்கு எம்.பி.களும் உள்ளனர். எல்.ரி.ரி.ஈ. யினருக்கு அரசாங்கம் ஆயுதங்களைக் கொடுத்ததெனக் குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சியினர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை முறியடிக்க முயலுகின்றனர்.

தற்பொழுது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலவும் நிலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 6021 பேரை காணவில்லை

## ஐ.நா. மனித உரிமை குழுவிடம் மனு

(யாழ்ப்பாணம்)

10.06.1990 முதல் ... னால் உ...

## கொட்ஸ்பிறிங் 2ஆம் ஆண்டில் நுழைகிறது

(யாழ்ப்பாணம்)

ஆங்கில வார இதழான கொட்ஸ்பிறிங் (Hot Spring) தனது முதலாவது ஆண்டு நிறைவை இன்று பூர்த்தி செய்கின்றது.

ஓர் ஆண்டு தனது (4ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் ஊரடங்கு

[புங்குடுதீவு]

நயினாதீவில் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. அங்குள்ள சிறிலங்காகடற்படையினரால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டத்தை அடுத்து படையினரால் வீடு வீடாக சோதனை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. இதேவேளை நயினாதீவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கடற்பரப்பில் மீன்பிடிப் படகு மீது சூடு

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மூதூருக்குச்சமீபமாகவுள்ள இலங்கந்தை பகுதியில் ஆழ்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சிங்களமீனவர்களின் இழுவைப் படகுகள் மீது இனந்தெரியாத படகுகளில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கிய இரு இழுவைப் படகுகளில் ஒன்று கரைசேர்ந்தது. மற்றைய படகிற்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி இதுவரை தெரியவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

## 10 — 35 வயது வரையிலான ஆண்கள் தடுத்து வைப்பு

அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதிகளில் பத்து வயதிற்கும் முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்ட ஆண்களை தனியாகத் தேர்ந்தெடுத்து தம்மோடு வைத்திருக்கின்றார்கள். படையினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் இவர்களில் சிலரை வழிகாட்டிகளாகவும் பயன்படுத்தி வருகின்றனர். கைது செய்யப்பட்டுள்ள ஆண்களை அனலைதீவு, சதாசிவ மகாவித்தியாலயத்திலும் பெண்களை ஐயனார் ஆலயத்திலும் தடுத்து வைத்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

அப்படிச் செய்தால் வடக்கு, கிழக்கிலேதானாகவே தமிழீழம் பிரகடனப்படுத்தப்படும் என்று கூறினார்.

உடனடியாகப் பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்துமாறு எதிர்க்கட்சியினர் கோரும் புதிய நிலை பற்றிக் குறிப்பிடுகையிலேயே சிறிலங்கா ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

# ஐ.நா. மனித உரிமை குழுவிடம் மனு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள இறந்த மற்றும் காணாமல் போன 2,249 பேரின் பெயர்கள் ஐ. நா. மனித உரிமைக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

10.06.1990 முதல் 30.05.1991 வரையான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இறந்தும் காணாமல் போயுமுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 6021 என ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் மேலும்

காணாமல் போனோரை தேடிக் கண்டுபிடிக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

இராணுவ அனர்த்தங்களால் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களின் உயிர் வாழவும் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் உதவி பெற்றுக்கொடுக்க வேண்டும்.

யுத்தம் மேலும் தொடராமல் தடுக்கவும், மனிதக் கொலைகள் இடம்பெறாமல் இருக்கவும், மனித உரிமைகள் குழுவினர் அப் பகுதியில் நிலைகொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

# நீதிமன்றத் தீர்ப்பை அடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை

- பிரேமச்சந்திரா

(கொழும்பு)

''எமக்கும் சுய கௌரவம் உண்டு இதனாலேயே கட்சியில் இருந்து எம்மை வெளியேற்றியதை ஆட்சேபித்து நாம் நீதிமன்றம் சென்றுள்ளோம். அதன் தீர்ப்பைப் பொறுத்தே எமது அடுத்த நடவடிக்கை அமையும்'' இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளருமான திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்வீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில் அரசியல் குற்றப்பிரேரணையைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகர் விலகுவதை அரசதரப்பு விரும்பவில்லை

(கொழும்பு)

சபாநாயகர் பதவியைத் தொடர்ந்து வகிக்க ஜனாப் எம். எச். முகமட் விரும்பாது இருக்கக் கூடும். ஆனாலும் சபாநாயகர் தமது பதவியை இராஜினாமாச் செய்ய மாட்டார் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

முகமட் தனது சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்தால் அதைத் தொடர்ந்து புதிய சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்யப் பாராளுமன்றத்தில் இரகசிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறில் மீண்டும் பிரேமா அணியில்

அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த பி. எம். பி சிறில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அணிக்கு மீண்டும் திரும்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவை அமெரிக்கா எதிர்த்தும் ஜனாதிபதி மூடினார்

— அஸ்வர்

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்கள் சிலர் சிறிலங்கா ஜனாதிபதியைச் சந்தித்து சிறிலங்காவின் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர். இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடும் முடிவை மாற்றாவிட்டால் சகல உதவிகளையும் நிறுத்தப்போவதாக எச்சரித்தனர். எனினும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பதற்காக சிறிலங்கா ஜனாதிபதி இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடினார். இவ்வாறு பாராளுமன்றத்தில் பேசிய முஸ்லிம் கலாசார அலுவல்கள் அமைச்சர் அஸ்வர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், சிறிலங்கா ஜனாதிபதி இத்தகைய மிரட்டல்களுக்கு பணிந்து போய்விடவில்லை எனவும் தெரிவித்தார்.

# மாத இறுதியில் மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

அதிருப்தியாளர் முயற்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் இம்மாத இறுதியில் அரசாங்கம் மீது மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர உள்ளனர்.

இத் தீர்மானம் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் வழங்கப்பட்ட ஆயுத உதவியை முன் வைத்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்க்கட்சியினரும் பிரேம

(4 ஆம் பக்கம் பார்க்க)

சோதனை நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. இதேவேளை நயினாதீவின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆண்களை தனியாகத் தேர்ந்தெடுத்து தம்மோடு வைத்திருக்கின்றார்கள். படையினரால் பணயக் கைதிகளாக

திலும் பெண்களை ஐயனார் ஆலயத்திலும் தடுத்து வைத்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

# கலை இலக்கிய வடிவங்களை பாதுகாக்க உருவாகிய ‘வெளிச்சம்’

- மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

இதுகாலவரையில் எமது கலை இலக்கிய வடிவங்கள் வளர்க்கப்படவில்லை. ஊக்குவிக்கப்படவுமில்லை, பாதுகாக்கப்படவுமில்லை. விடுதலைப் புலிகள் முக்கியமான இக்கடமையைச் செய்ய முன்வந்துள்ளனர். இதற்காகவே கலை பண்பாட்டுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது இம் முயற்சியில் அது வெற்றி பெற்று வருகிறது. இதற்காகவே வெளிச்சம் சஞ்சிகை இன்று வெளியிடப்படுகிறது. இதுவரையில் நாம் இழந்து போயிருந்த அல்லது இடைவெளி விடப்பட்டிருந்த கலை இலக்கிய வளர்ச்சி என்பதற்கு இத்தகைய வெளியீடு ஒரு களமாகவும், கலை இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவிப்பதற்கும் இவை உதவும். இருப்பதை இருப்பதாகவும், உண்மையை உள்ளபடியும் எழுதும்படி கலை, இலக்கிய கர்த்தாக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இவ்வாறு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சிறியதைப் பெரியதாக்கி

# போராட்டத்தைத் திசைதிருப்பும் சில பல்கலை. விரிவுரையாளர்கள்

யோகி

எத்தனையோ அளப்பரிய விடயங்கள் இம் மண்ணில் இடம்பெறும்போது அவற்றை கண்டுகொள்ளாமல், அத்தகையவற்றின் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ளாமல், சிறிய விடயங்களை தேடிப்பிடித்து பூதாகரமாகப் பெரிதுபடுத்திப் பார்க்கும் வழக்கம் இங்கு சிலருக்குண்டு. உதாரணமாக மனிதாபிமானம் பற்றிப் பேசும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் போராட்டத்தை திசை திருப்புபவர்களாக- போராட்டத்திற்கு எதிரானவர்களாக இருப்பதைப் பார்க்கலாம். இவ்வாறு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற வெளிச்சம் சஞ்சிகை வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருடன் பேசும் போது கிழக்கில் சிங்கள மக்கள் நீண்டகாலமாக வாழும் இடங்களைச் சுட்டிக்காட்டி. இவையெல்லாம் சிங்களவருக்கு சொந்தமான இடங்கள் எனக் குறிப்பிட்டார். ஆனால் அவர் சிலாபத்தில் அல்லது இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதையோ அல்லது திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்களால் எமது மண் பறிக்கப்படுவதைப் பற்றியோ குறிப்பிடுவதில்லை. அரசுக்குச் சாதகமான ஒரு சில உண்மைகள் இருக்கும்போது அவற்றை தேடிக்கண்டுபிடித்து பூதாகரமாகப் பெரிதுபடுத்தும் இத்தகைய அறிஞர்கள் போராட்டத்தையும் மக்களையும் நேசிக்கவில்லை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ரைப்ரைட்டர்**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், மற்றும் தமிழ்- ஆங்கிலம் வரப்பிலி வேலைகளுக்கும் : பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி 3-ம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (R/1832)

**A/L இரசாயனம்**

A/L 93 இரசாயனம் ஆரம்பம் 15-10-91 செவ்வாய் 4.30 p m சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (R/1834)

**அறிவித்தல்**

17-10-91 வியாழன் தனியார் கல்வி நிறுவனங்களில் விஜயதசமி விழா கொண்டாடலாம் என முடிவுசெய்யப்பட்டுள்ளது. நிர்வாகம் தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம். (R/1837)

## அறிவித்தல்

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம

அங்கத்தவர்களுக்கு மட்டும்

இன்றைய காலகட்டத்தில் ஒப்பந்த வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் உடனடியாக சங்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3299)

## 93 A'L

★ விஞ்ஞானபாடங்கள்

## பனம் நாற்றுக்கள்

பரிசோதனை முறையில் பனை அபிவிருத்திச் சபையால் உற்பத்தி செய்யப்பட்ட, இரண்டு வயதுடைய பனம் நாற்றுக்கள் நடுகைக்குத் தயாராக உள்ளன. இவற்றை நாட்டிப் பயன்பெற ஆர்வமுள்ள பொது ஸ்தாபனங்கள் மற்றும் தனியாருக்கு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு. அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(B/3293)

# A/L 93

| | |
|---|---|
| Chemistry | — திரு. மகாதேவா |
| Chemistry | — திரு. D. S. சோதி |
| Physics | — திரு. அருள்தாஸ் |
| Physics | — திரு. ரவீந்திரநாதன் |
| Zoology | — திரு. K. சிவபாதம் |
| Zoology | — திரு. விக்கி |
| Botany | — திரு. ஸ்ரீகரன் |
| Botany | — திரு. சதீஷ் |
| Pure & Applied | — திரு. மகேஸ்வரன் |
| Pure & Applied | — திரு. லஷ்மன் |

## ஆரம்பம்: 19 - 10 - 1991

- திரு. மகாதேவா ஆசிரியரின் வகுப்புகளுக்கான அனுமதிகள் 22-10-91 (போயா) பி. ப. 1.00 மணிக்கு நடைபெறும். இரசாயனவியல் பிரவேசப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் (40 M.C.Q) முதல் 100 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

## BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

B/3295)

## தாவரவியல்
## ஐங்கரநேசனி
## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(B/3302)

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
**(BECON)**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# A/L 93

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. வரதராஜன் |
| அளவையியல்:- | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம்:- | பிரபல ஆசிரியர் |
| கணக்கியல்:— | திரு. மரியதாஸ் |
| | திரு. யோகராஜா |
| | திரு. சௌந்தி |
| தமிழ்:- | திருமதி மீரா |
| இந்துநாகரிகம்:- | திருமதி அருள்நங்கை |
| சரித்திரம்:- | செல்வி நாகராணி |
| புவியியல்:- | திரு. ஜோசப் |
| அரசியல்: | திரு. செல்வா |

**ஆரம்பம்:- 19-10-91 சனி 7.00 மணி**

- கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கும் நிறுவனம்.
- முதல் அனுமதி பெறும் 100 மாணவர்கள் மட்டுமே, வகுப்புகளுக்கு அனுமதிக்கப் படுவர்.

(B/3271)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் வீரமரணம்



தென்மராட்சியில் ... ... கால்நடை வளர்ப்போரே!

எமது கால்நடை வளத்தை அபிவிருத்தி செய்வோம்.

## இதோ!
## உங்களை நோக்கிஓர் உதவிக்கரம்.

கால்நடை உணவு வகைகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும்

உங்களின் உற்பத்திகளுக்கு நியாய விலையைப் பெற்றுக் கொள்ளவும்

**எம்முடன் தொடர்பு கொள்ளவும்.**

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு

தென்மராட்சியில்

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
சமநல சேவைகள் நிலையக் கட்டடம்
கண்டி வீதி, மீசாலை வடக்கு.

(B/3307)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 10 - 13**





ஜெனா விஜி

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

அமல் (நிக்கலஸ் அருள்வாசகம் - வட்டக்கண்டல், மன்னார்)

நியூமன் (சிற்றம்பலம் பாஸ்கரன் - அலங்கேணி,

# 93 A/L

★ விஞ்ஞானபாடங்கள் மட்டும்

ஆரம்பம்
19 - 10 - 1991
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

**NEW MASTER INSTITUTE**
**Jaffna**

(B-3280)



## பின்போடப் பட்டுள்ளது

மீசாலை தெற்கைச்சேர்ந்த மதுவன் சனசமூக நிலையத்தினரின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 01-01-92-ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

- நிர்வாகி

(R- 1839)


58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/3295)

## 45.ம் நாள் நினைவஞ்சலி

| வீட்டுக்கு | நாட்டுக்கு |
|---|---|
| 28 - 05 - 1973 | 29 - 08 - 1991 |



### வீரவேங்கை அஜந்தன்

[மதியாபரணம் -- தவகாந்தன் - கோபு]

யாழ். மத்தியகல்லூரி மாணவன்

தவகாந்தன் - கோபுவெனும் நமது செல்வன்
தாரணியில் இல்லையவன் மேல் உலகில்
சிவசாந்தம் பெறவேண்டித் தினமும் நாங்கள்
தேவிபுவ னேஸ்வரியைத் தொழுது நிற்போம்!

ஓம் சாந்தி!

32/3, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.

உன் பிரிவால் துயருறும்
உற்றார், உறவினர்கள்

(B/3314)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 30 - 10 - 1974 | 13 - 07 - 1991 |



ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த

## 2ஆம்லெப். பூபாலினி
## (நாகரத்தினம் பரமேஸ்வரி)

பூபாலினியே எம்பொழுது விடிவதற்கு
பொன்னான உன்னுயிரை
அர்ப்பணித்த தெய்வம் நீ
பாழும் கொலை வெறியர்
பாலைவனம் ஆக்கும் எங்கள்
ஈழத் தமிழகத்து
இன்னல் துடைக்க வந்த
பாவைவனத் துர்க்கை
பரமேஸ்வரி யாம் நீ
கொஞ்சும் மழலை மொழி
செஞ்சிப் பழகும் விழி
கொண்ட எங்கள் செல்வக்
குழந்தை கலாவோடா
துப்பாக்கி ஏந்தும் துணிவு பெற்றாள்
என்று எங்கள்
பாரதிநகர் வியக்கப், பார் புகழ
பாலைவனப் போர்க்களத்தில் போராடி
படைத்தாய் வரலாறு.

3ஆம் யுனிற்,
மல்லாவி,

அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்கா,
அண்ணிமார், மருமக்கள்.

(B/3300)

வீரமரணமெய்திய

**அமல்** (நிக்கலஸ் அருள்வாசகம் - வட்டக்கண்டல், மன்னார்)

**நியூமன்** (சிற்றம்பலம் பாஸ்கரன் - ஆலங்கேணி, பூநகரி)

**லெப். அன்றூ** (கு. கிங்ஸ்லி - கொக்குத்தொடுவாய்)

**2ஆம் லெப். நவாஸ் / நவி** (பழனிவேல் நவீந்திரன் - வல்வெட்டித்துறை)

**2ஆம் லெப். சந்திரன்** (இராசதுரை ஜெயச்சந்திரன் - திருநெல்வேலி)

**சண்** (ஜெகராசா ஜெயசீலன் - நாவற்குழி, கிழக்கு)

**றாஜா** (இராசதுரை இலிங்கேஸ்வரன் - தாவடி, கொக்குவில்)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**ஜெனா** (புஷ்பலதா செபமாலை அன்னாட்டி, அடம்பன், மன்னார்)

**விஜி** (கோமதி பூவிலிங்கம் - ஆலடி ஒழுங்கை, கோண்டாவில்)

**பிறேமன்** (சோமசுந்தரம் இளங்கோ - சங்கத்தானை, சாவகச்சேரி)

கோண்டாவில், காரைக்கால் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**அக்பர்** (அருணாசலம் பாலகுமார் - கோண்டாவில்)

சுன்னாகத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான நாடக நெறியாளர் வி. எம். குகராஜா

1988 ஆம் ஆண்டு கொக்குவில் மேற்கு சேணியடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய யாழ். நகரப் பொறுப்பாளர்

**கப்டன் கரிகாலன்** (பொன்னம்பலம் கௌரிபாலன் - வரணி வடக்கு)

**ஜோதிரவி** (சண்முகம் வேல்றாஜ் - அல்லிப்பளை)

யாழ் - காங்கேசன்துறை வீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் டிக்கோ ரவி (அருளானந்தம் ரவி) மற்றும் தெல்லிப்பளை, இனுவில் பகுதிகளில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்கள் இருவர்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B 3308)

# "70 நாள் வீசிய அரசியல் புயல்"

சபாநாயகர் உண்மையில் தைரியமாகச் செயற்பட்டுள்ளார். அரசியற் குற்றச்சாட்டு மனுவில் இருந்து நான் மீண்டது இரண்டாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றது போன்றதாகும் என அரசியல் குற்றச்சாட்டுமனுவை சபாநாயகர் நிராகரித்ததைத் தொடர்ந்து தனது மகிழ்ச்சியை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.


சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்த கருத்தானது முற்றிலும் சரியானதே. சபாநாயகர் முகமட் இந்தியா செல்வதற்கு முன்பிருந்த நிலையை அவதானித்துக் கொண்டிருந்த எவரும் குற்றவியல் விசாரணை மனு விவகாரம் இவ்வளவு சுலபமாகத் தீர்ந்து போய்விடக் கூடிய விடயமாகக் கருதி விட வில்லைத்

பெறப்பட்டது என்பது ஏற்புடையதல்ல. அதிருப்தியாளர்களின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி தெரிவித்ததுபோன்று எம். பிக்கள் ஏமாற்றப்பட்டோ அல்லது குற்றப்பத்திரத்தைப் பார்க்காமலோ கையொப்பம் இட்டிருந்தால் அவர்கள் எவரும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு லாயக்கு அற்றவர்கள் என்பது ஏற்புடையதொன்றே.

## சபாநாயகரின் நிலைப்பாடு

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சபாநாயகர் ஒருவ

இதே வேளை எதிர்க்கட்சியினரும் ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட பிரேமதாசா அதிருப்தியாளருப் சபாநாயகரின் செயற்பாட்டில் வெகுவாக நம்பிக்கைத் தன்மை கொண்டிருந்தனர். சபாநாயகரின் நடத்தைக்கு



புகழாரம் சூட்டிய அவர்கள் சபாநாயகருக்கு ஆதரவான அறிக்கைகளை விடுத்ததோடு சபாநாயகரின் நடத்தையை கண்டிப்பவர்களுக்கு எதிராகவும் கண்டனம் எழுப்பினர்.

ஆனால் கொமன்வெல்த் பாராளுமன்ற அங்கத்தவர் மாநாட்டிற்குச் சென்று திரும்பிய பின்னர் சபாநாயகர் எம். எச் முகமட் ஜனாதிபதி பிரேமதாசா மீதான குற்ற விசாரணை மனுவை இரத்துச்செய்வதாக அறிவித்தார்போலும்பாலும் பலராலும் இது எதிர் பார்க்கப்படாத ஓர் அறிவிப்பு என்றே விமர்சிக்கப்படுகின்றது. குற்ற விசாரணை மனுவில் உள்ள கையொப்பங்கள் தமக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை என அறிவித்தார்.

சபாநாயகரின் இவ்வறிவிப்பு சிறிலங்கா அரசியலில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் ஓர் அறிவிப்பாக இருந்தது. பலரது அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குரியதாகவும் சபாநாயகர் எம் எச். முகமட்டின் அரசியல் எதிர்காலம் பற்றிய

சிறிலங்கா பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி ஆர் பிரேமதாச பேசிய போது பாராளுமன்றத்தில் எழுந்த கூச்சல் குழப்பத்தை விடவும் சபாநாயகர் எம். எச் முகமட்டிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்தபோது எழுந்த கூச்சலும், குழப்பமும், வசைமாரியும் பெரியதாக இருந்தது என்பதில் இருந்தே முகமட் மீது எதிர்க்கட்சியினர் கொண்டிருந்த ஆத்திரம் புலப்படுவதாக இருந்தது.

சபாநாயகர் முகமட் குற்ற விசாரணை மனுவை ரத்துச் செய்ததற்கு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் காரணம் கோரியதை விட சபாநாயகருக்கு எதிரான தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களும், கூக்குரல்களும் எழுந்தமை சபாநாயகர் தம்மை ஏமாற்றிவிட்டதாக எதிர்க்கட்சிகளும் அதிருப்தியாளர்களும் கருதுவதையே வெளிப்படுத்துவதாக உள்ளது. சபாநாயகர் இறக்க வேண்டும், அவரைப் புதைக்க வேண்டும், லஞ்சப்பேர்வழி போன்ற வசைமொழிகள் வரம்பு மீறி அவர் மீது சுமத்தப்பட்டது.

அதே வேளை சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரே

க்கட்சியினரும் இவ் விடயத்தில் மிகவும் தீவிரமாகவுள்ளனர்.

இந்நிலையில் முகமட் அவர்களோ அன்றி ஆளும் எதிர்க்கட்சியினரோ விரும்பினும் தொடர்ந்தும் சபாநாயகர் பதவியை முகமட் வகிப்பதும் பாராளுமன்றத்தை நடத்துவதும் சாத்தியமாகுமா என்பது சந்தேகமே. அதேவேளை ஆளும் கட்சியினரும் தற்பொழுது பிரேரணையை முகமட் நிராகரித்தார் என்பதற்காக அவரை ஆதரிப்பினும், இப்பிரேரணை தொடர்பாக ஆரம்பத்தில் அவர் நடந்து கொண்ட விதத்தை மறந்து விடுவார்கள் என்றும் தொடர்ந்தும் ஆதரவு அளிப்பார்கள் என்றும் சொல்லிவிட முடியாது.

## அதிருப்தியாளர் அரசியலில் அஞ்ஞாத வாசம்

பிரேமதாசா மீதான குற்ற விசாரணை மனு நிராகரிக்கப்பட்டமையும் அதைத் தொடர்ந்து வந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பன தோல்வி கண்டமையும் தற்போதைக்கு அவர்களின் அரசியலின் எதிர்

யாக அதில் கையொப்பமிட்ட பலரது பெயர்கள் வெளியாகவும் நேர்ந்துள்ளது. அவர்கள் இப்பொழுதும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே உள்ளனர்.

சபாநாயகருடன் தற்பொழுது நல்லுறவு நிலவுவதாகக் கருதும் பிரேமதாசாவினால் அவர்களது பெயர்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பினும் அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுப்பதோ அன்றி கட்சியிலிருந்து வெளியேற்றுவதோ இலகுவான காரியமாக இருக்காது. அது அவருக்கு எதிரான நிலையையே தோற்றுவிக்கும்.

அதேவேளை அதிருப்தியாளர்களை உடன் வெளியேற்றி தமக்குச் சார்பானவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக பாராளுமன்றத்தை உடன் கலைத்துப் பொதுத் தேர்தலை உடன் நடத்தக்கூடிய சாதகமான நிலையிலும் ஐ தே கட்சி இல்லை என்றே சொல்லவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினர் என்ற உணர்ச்சி பூர்வமான குற்றச்சாட்டு சில வேளை ஐ. தே கட்சிக்கும், பிரேமதாசாவிற்கும் பாதகமான முடிவுகளையே ஏற்படுத்தி விடக் கூடும்.

சுருக்கக் கூறின் சிறிலங்கா ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்ட குற்ற விசாரணை கோரும் மனு நிராகரிக்கப்பட்டாலும் அதன் தாக்கம் சிறிலங்கா அரசியலில் பல மாற்றங்களை. அதன் அரசியல் ஸ்திரணத்தன்மையும்

# ஒருவர் துறவறம்?

தான். இதனை சிறிலங்கா ஜனாதிபதியே வெளிப்படையாகவே தெரிவித்தார். சிறிலங்கா ஆட்சித்தலைவர்கள் எவரும் தமது ஆட்சிக் காலத்தில் இவ்வாறான தொரு அரசியல் நெருக்கடியை எதிர் கொள்ளவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

## எம்.பிக்கள் நிலைப்பாடு

திரு. பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணையில் 123 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டிருந்தார்கள் என செய்திகள் தெரிவித்தன அவ்வாறாயின் சுமார் 45 ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கைச்சாத்து இட்டிருத்தல் வேண்டும். ஆரம்பத்தில் சபாநாயகர் ஜனாப் எம்.எச் முகமட்டும்இப்பிரேரணையை ஏற்றுக் கொண்டதில் இருந்து திட்டவட்டமாக113 பாராளுமன்ற உறுப்பினர்களாவது இப்பிரேரணையில் கட்டாயம் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். அல்லாதுபோனால் சபாநாயகர் பிரேரணையை ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. ஆகையினால் திட்டவட்டமாக 45 ஐ தே. கட்சி பாராளுமன்ற எமபிகள் கை

ருக்கு இவ்விவகாரத்தில் ஏற்பட்ட அரசியல் முக்கிய துவம் போன்று வேறு ஒரு காலத்திலும் ஏற்பட்டிருக்கவில்லை எனறே கூறலாம் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஓர் ஜனாதிபதியை பெரும் விமர்சனத்திற்கும், அவரின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குரியதாக்கும் அதிகாரமும் சபாநாயகர் கையில் இருந்தது.

திரு பிரேமதாசாவிற்கு எதிரான குற்றவியல் விசாரணை மனு தயாரிப்பு விவகாரம் சபாநாயகரிடம் சமர்ப்பிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னரே மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டுவந்த இந்த மனு சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னரும் அதனை உடனடியாக சபாநாயகர் எம் எச். முகமட் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அறிவிக்கவில்லை எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் சபாநாயகரே பிரேமதாசாவிற்குத் தொலைபேசி மூலம் இதனை அறிவித்தார்.

இந் நிலையில், சபாநாயகரின் நிலை விமர்சனத்திற்குரியதாகவே இருந்தது. ஆளும் கட்சியினர் தமது அதிருப்தியை பகிரங்கமாக

# சிலர் அஞ்ஞாத வாசம்?

ரணையைச் சமர்ப்பித்துப் பேசிய நிச்சாட் பத்திரன ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்ட குற்றப்பிரேரணை பற்றிய முடிவை சபாநாயகர் பாராளுமன்றத்திற்கே அறிவித்திருக்க வேண்டும். ஜனாதிபதி செயலகத்திற்கு முதலில் அறிவித்தமை தவறு என்று குற்றம் சாட்டியுள்ளார் அத்தோடு ஒரு பிரேரணை முன்னறிவித்தலில் இடப்பட்டுள்ள கைச்சாத்துக்கள் போலியானவை என எப்படி அவர் கண்டறிந்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர்

காலம் பற்றிய பெரும் கேள்விக்குறி ஒன்றையே எழுப்பியுள்ளது

ஐ தே கட்சியிலும் இருந்து வெளியேற்றப்பட்ட இவர்கள் சில வேளைகளில் சில வருடங்கள் அரசியலில் அஞ்ஞாதவாசம் மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகினாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை இவர்களின் இன்றைய நெருக்கடி நிலை அண்மையில் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த ஓர் கேலிச்சித்திரத்தை (ஓர் செழிப்பான வாழை மரத்தில் இ

பெரிதும் பாதித்துள்ளன என்றே சொல்லவேண்டும். எழுபது நாட்கள் வீசிய இப்புயலினால், சிலர் அரசியல் துறவறம் பூணவும், சிலர் அரசியல் அஞ்ஞாதவாசம் அனுபவிக்கவும் வேண்டியும் வரலாம். அதே வேளை சிலர் என்றும் அச்சத்துடனும், தம் செல்வாக்கினைத் திடனும் தமது அரசியலைத் தொடர வேண்டிவரும்.

## கலை இலக்கிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாது. ஆகையினால் திட்ட வட்டமாக 45 ஐ.தே. கட்சி பாராளுமன்ற எம்பிகள் கையொப்பம் இட்டே ஆகியிருக்க வேண்டும்.

ஆனால், குற்றப்பிரேரணை விவகாரம் வெளிவந்தபோது முதலில் எட்டு உறுப்பினர்கள் மட்டுமே வெளிப்படையாக பிரேமதாசாவை எதிர்க்க முன் வந்தார்கள் பின்னர் படிப்படியாக இத்தொகை 12 ஆக அதிகரித்தது. அதாவது குற்ற விசாரணை மனுவில் கையொப்பம் இட்ட எம்.பிகள் சகலரும் தம்மை வெளிப்படையாக அடையாளம் காட்டிக் கொள்ள முன்வரவில்லை. மாறும் சூழ்நிலைக்கு ஏற்ப நிலையை மாற்றிக்கொள்ள அவர்கள் தயாராக இருந்தார்கள்.

அதேவேளை பிரேமதாசாவிற்கு எதிராக எம்.பிக்களை ஏமாற்றிக் கையெழுத்துப் பெறும் கட்சியினர் தமது அதிருப்தியை பகிரங்கமாக வெளிப்படுத்தினர் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் எனவும் கோரினர்.

அதேவேளை சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று குற்றவிசாரணை மனு பாராளுமன்றப் பதிவேட்டில் இடம் பெறவில்லை. ஆகையினால் வலுவிழந்து விட்டது என ஜனாதிபதி பிரேமதாசா சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடுகள் வலுவடைந்தன. கடிதங்கள் மூலமாக இருவரும் அதிகாரப் போர் ஒன்றை நடத்தினர் என்றே சொல்லலாம். இந்நிலையில் சிறிலங்காவின் அரசியல் யாப்புச் சட்டமே கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

அரசியல் எதிர்காலம் பற்றிய

## ஜெயா

சர்ச்சையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது இதன் பிரதிபலிப்பாக சபாநாயகர் எம்.எச் முகமட் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டுவரப்பட்டது.

### எதிர்க்கட்சிகளின் சீற்றம்

சபாநாயகர் எம். எச். முகமட் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சிகளும் பிரேமதாசா அதிருப்தியாளர்களும் பொழிந்த வசை மாரிகளும் அள்ளிவீசிய குற்றச்சாட்டுகளும் அவர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆத்திரத்தை வெளிப்படுத்துவதாகவே இருந்தன.

கடந்த மாதம் 24 ஆம் திகதி கண்டறிந்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர் கண்டு விசாரணை நடத்தினாரா? அல்லது கைச்சாத்து நிபுணர்களை அழைத்து பரிசீலனை செய்தாரா?

இவ்வாறான கேள்விகளுக்கு சபாநாயகர் எம் எச் முகமட் பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் இல்லாவிடினும், சபாநாயகர் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டியது அவரது கண்ணியத்திற்கும் நடுநிலைமைக்கும் அவசியமானதாகும். அதாவது சபாநாயகர் ஒரு நீதிபதி போன்ற ஸ்தானத்தை வகிப்பதனால் அவரது தீர்ப்பிற்குரிய காரணத்தை வெளியிட வேண்டிய அவசியமும், கடப்பாடும் அவருக்கு உள்ளது என்பதே நியாயமானதாகும்.

### சபாநாயகர் எதிர்காலம்

சுமார் எழுபது நாட்களுக்கு முன்னர் சிறிலங்காவில் எழுந்த அரசியல் நெருக்கடி யானது ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கும், அவரது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் எதிராக வேகமாக வீசிவந்த புயல் போன்று இருப்பினும் கடைசியில் சபாநாயகரையே அது அள்ளிச் சென்றதாகவே முடியும் நிலையே இன்று அரசியலில் உருவாகியுள்ளது. பிரேமதாசா அதிருப்தியாளர்களில் முக்கியமானவரான லலித் அத்துலத்முதலி குற்றப்பிரேரணையை ரத்துச் செய்த சபாநாயகரின் செயல் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய ஒரு செயல் எனத் தெரிவித்துள்ளதோடு ஜனநாயக மரபைப் பின்பற்றி அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டுமெனக் கோரிக்கையும் விடுத்துள்ளார். அவரோடு எதிர்க்கட்சிகளும் வேடிக்கைச் சித்திரத்தை(ஓர் செழிப்பான வாழை மரத்தில் இருமரங்கொத்திப் பறவைகள் இருக்கமாக கொத்திய பின் தமது சொண்டுகளை இழுக்க முடியாமல் இருப்பதைப்) ஞாபகமூட்டுகின்றது. இக்கேலிச் சித்திரம் இவர்களின் நிலையை நன்கு விளக்குகின்றது என்றே சொல்லலாம்

### பிரேமதாஸாவின் நெருக்கடி

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எழுபது நாட்களுக்கு முன் உருவாகிய பெரும் புயலில் சிக்கி வெற்றிகரமாக கரைசேர்ந்துள்ளார் என்றே சொல்ல வேண்டும் ஆனால் புயலின் தாக்கம் அவரை பாதிக்காமல் இல்லை.

முன்னரே அவர் மீது வைக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டுகளில் ஒன்று சர்வாதிகாரப் போக்கில் ஆட்சியை நடத்திச் செல்கின்றார் என்பதாகும் ஆனால், தொடர்ந்தும் அவர் அப்போக்கிலேயே தனது ஆட்சியைத் தொடரக் கூடிய நிலையே உள்ளது என்பதையே தற்பொழுதும் அவரது நடத்தையை வெளிக்காட்டுவதாக உள்ளது இதனை கைத்தொழில் அமைச்சு பிரதம மந்திரி டி.பி.விஜேதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டமை உணர்த்துவதாகவுள்ளது. டி.பி.விஜேதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நான்காவது அமைச்சு இதுவாகும். இந்த நான்கு அமைச்சும் சிறிலங்காவின் இன்றைய மிக முக்கிய அமைச்சுக்களாகும்.

சிறிலங்கா ஜனாதிபதி தற்பொழுது நெருக்கடியில் இருந்து மீண்டிருந்தாலும் அவரது நெருக்கடியானது முழுமையாக நீங்கிவிட்டது என்று சொல்வதற்கில்லை சபாநாயகர் குற்றப் பிரேரணையை நிராகரித்தமை

# மண்ணை நேசிப்பவர்களை நாம் பூசிக்கின்றோம்

**: புதுவை**

(யாழ்ப்பாணம்)

மண்ணை நேசிக்கும் அனைவரையும் நாம் பூசிக்கின்றோம் என்று நேற்று நடைபெற்ற வெளிச்சம் கலை இலக்கிய சமூக இதழின் வெளியீட்டு வைபவத்திற்கு தலைமைதாங்கிப் பேசிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் முத்தமிழ் விழாவின் போது பிரகடனம் செய்யப்பட்டதற்கு அமைவாக கலைஞர்களின் - கவிஞர்களின் தளமாக இச்சஞ்சிகை வெளியிடப்படுகின்றது எனத்தெரிவித்தார். இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் வரவேற்புரையைத்தொடர்ந்து, இவ் விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அவர்களால் மூத்த எழுத்தாளர்களான அ. செ. முருகானந்தம், அல்லை ஆறுமுகம் ஆகியோர் ரூபா 10000க்கான பணமுடிப்பு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வெளிச்சம் சஞ்சிகையின் முதற்பிரதியை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு தேவர் அண்ணா வெளியிட்டு வைக்க, விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் பெற்றுக் கொண்டார், வெளியீட்டுரையைத் திரு. பொ. பூலோகசிங்கம் நிகழ்த்தினார். வெளிச்சம் சஞ்சிகையின் ஆய்வுரையை சொக்கன். கோகிலா மகேந்திரன், அ. யேசுராசா ஆகியோர் நிகழ்த்தினர் முருகையன் சிறப்புரை வழங்கினார்,

கலை இலக்கிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியீட்டு வைபவத்திலும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா வேண்டுகோள் விடுத்தார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் இந்நிகழ்ச்சியில் திரு. கோ. மகேந்திரராசா மேலும் பேசுகையில் கலை, பண்பாடு, தேசிய இனத்தின் முதுகெலும்பு அனைவரும் அறிந்ததொன்று. இனத்தின் எழுச்சிக்கும், வாழ்வுக்கும் அது முக்கியமானது இதனாலேயே பெருந்தேசிய வாதம் அல்லது பிறிதொரு நாடு அடக்குமுறைப்படும்போது கலைகளை பண்பாட்டை சிதைக்க முற்படும். இனத்தின் எழுச்சியை அல்லது விடுதலைப் போராட்டத்தை அடக்க கலை, பண்பாடு என்பவற்றை திட்டமிட்டுச் சிதைக்க எதிரிகள் முற்பட்டு நிற்பார்கள்.

கலை, இலக்கிய வடிவங்கள் போராட்டத்தை வளர்க்கும் ஊக்குவிக்கும் ஊடகங்களாக பயன்படுத்தப்பட வேண்டும். கலை இலக்கியம் என்பவைகள் ஒரு இனத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும்.

கலை இலக்கியம் என்பவற்றில் இலக்கிய கர்த்தாக்கள் இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் காட்டலாம் அதற்காக பயன்படுத்துவதை தவிர்த்து எமது கலை இலக்கிய கர்த்தாக்கள் உள்ளதை உள்ளபடியாக இருப்பதை இருப்பதாகவும் எடுத்தியம்பும் இலக்கியங்களை படைக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# எமது மக்கள் நிரந்தர நிம்மதியோடு வாழ்வதற்காகவே போராடுகிறோம்

மீட்பு நிதியை செலவினங்களுக்குப் பயன்படுத்துவது எமது நோக்கமல்ல. இந்த மீட்பு நிதியை மூலதனமாக வைத்துக்கொண்டு எங்களுக்கு வேண்டிய வருவாயைப் பெருக்கி அதன் மூலம் எங்களுடைய ஆயுதபலத்தை அதிகரித்து எமது விடுதலைப் போராட்டத்தை விரிவுபடுத்துவதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு அளவெட்டி வடக்கு அம்மன் கோயில் முன்றலில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மீட்புநிதி பற்றிய விளக்கவுரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய விடுதலைப்புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் மண்ணின் விடுதலைக்காக வற்புறுத்தி நிதிபெறலாமா? எனக் கேட்கிறார்கள். வற்புறுத்துகிறோம் உண்மைதான் உங்கள் குழந்தைக்கு வருத்தம் வருகிறது. டாக்டர் கசப்பான மருந்தைத் தருகிறார். குழந்தை குடிக்க மறுக்கிறது. வற்புறுத்திப் பருக்குகிறீர்கள். குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஏக்கத்தில். இதனைப் பார்த்த அயலவன் குழந்தையைக் கொல்கிறானே எனக் கத்துகிறான் நீங்கள் விட்டுவிடுவீர்களா? அல்லது குழந்தையை சாகடித்து விடுவீர்களா? அந்தப் பெற்றோரின் நிலையில்தான் இன்று நாங்கள் இருக்கிறோம். தமிழ் சமுதாயம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது, பண்டைய பெருமைகளும் சிறந்த மொழியும் இலக்கியங்களும் உள்ள தமிழ்ச்சமுதாயம் கல்தோன்றி

—தமிழேந்தி

மண்தோன்றாக் காலத்தே மானத்தோடு முன் தோன்றிய மூத்தகுடி இன்றைக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. அந்தச் சமுதாயத்தை அடிமை நிலையிலிருந்து விடுவிப்பதற்காக அந்த சமுதாயத்தின் மண்ணை மீட்டெடுப்பதற்காக போராடுகிறோம்.

எங்களுடைய மக்கள் வடித்த கண்ணீரைக் கண்டு ஆற்றமுடியாமல்தான் நாங்கள் ஆயுதம் ஏந்தினோம். எமது மக்கள் இந்த மண்ணிலே நிரந்தரமாக நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் தினம் தினம் செந்நீரை வடித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய மக்கள் இந்த மண்ணிலே சுதந்திரமாக நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் போராட்டம் நடத்தப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 06 | | 13 |
| - | | - |
| 06 | | 10 |
| - | | - |
| 1968 | | 1987 |



### வீரவேங்கை அக்பர்

(அருணாசலம் பாலகுமார்)

இந்திய இராணுவத்தின் நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த அருணாசலம் நாகேஸ்வரி தம்பதிகளின் செல்வ மகனே பாலகுமாரா! பல்கலைக்கழக வாசலில் காண உன் தந்தை ஆசை கொண்டார். கண்டது காலனின் வாயிலில். அங்கே உன் கதை முடிந்ததல்ல தொடருகிறது. உன் கதை பூவுலகம் இருக்கும் வரையும் வாழ்ந்துகொண்டே இருக்கிறாய்.

# தமிழீழ தேசிய ஆசி. ஒன்றிய விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர்கள் தமது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்து அதற்குரிய தீர்வுகள் பற்றி விளக்கம் அளித்தார்.

(ஈ)

## நயினாதீவில்

தெற்குப் பகுதியில் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் அதனை பலப்படுத்துவதற்காக அப்பகுதியில் உள்ள பனைமரங்கள் படையினரால் தறிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (22)

## போராட்டத்தை

என்றுதான் கொள்ளப்பட வேண்டும். அவர்கள் நல்ல ஆசிரியர்களாக - நல்ல மருத்துவர்களாக இருக்கலாம்.

அறிஞர்கள் என்று வரும்போது பலரும் ஒரு அந்தஸ்தையே எதிர்பார்க்கிறார்கள். கலாநிதிகள். புத்திஜீவிகள் என்ற பட்டப் பெயர்களை மட்டும் வைத்துக் கொண்டு போராட்டத்தில் கலந்துகொள்ளாமல், போராட்டத்தில் பங்கேற்காமல் பதவிகளை எதிர்பார்க்கும் தன்மையே காணப்படுகின்றது. அமெரிக்காவில் வாழும் சிலர் வகுக்கும் திட்டங்களுக்காக இங்கு போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்காக பெருந்தொகை பண உதவி செய்யத்தயாராக இருக்கும் அவர்கள் மத்திய குழு உறுப்பினர் பதவியை எதிர்பார்க்கிறார்கள். இங்கே வாருங்கள் எங்களோடு இருந்து கொண்டு உங்களுடைய ஆலோசனைகளைக் கூறுங்கள் என்றால் குறை சொல்வதிலேயே காலம் கழிக்கின்றார்கள். இத்தகைய குறைகளுக்கு அவர்களும் ஒரு வகையில் காரணம் என்பதை உணர்ந்து கொள்வதில்லை.

## திறந்த பல்கலை

கொழும்பு சென்றுள்ள யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் ஆ. துரைராஜா கொழும்பில் திறந்த பல்கலைக்கழக உபவேந்தரிடம் யாழ்ப்பாண பிரிவை மூடிவிடுவது பற்றிய உத்தரவு தொடர்பாக கலந்தாலோசிப்பார் என்றும் அல்லது கடிதப் போக்குவரத்துகளை சீர்செய்யும் வகையில் புதிய ஒழுங்குகள் மேற்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவார் என்றும் சொல்லப்பட்டது. (லோ)

## சிறில்

யுள்ளார்.

அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவிலிருந்து இவர் மீளவும் பிரேமதாசா குழுவிற்குத் தாவியது அத்துலத்முதலி குழுவுக்குப் பெரும் பின்னடைவு என்று கருதப்படுகிறது

## சபாநாயகர்

வாக்கெடுப்பு நடைபெறும்.

சபாநாயகருக்கானபோட்டி

# பொலிசார் விசாரணை

தமது பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட ஆயுதங்கள் எப்படிப் பிறரது கைக்குச் சென்றது என்பது பற்றி சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் வை. பி. டி சில்வாவிடம் சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ருமேனியத் தூதரின் புகைப்படம் அனுப்பப்பட்டது

(டில்லி)

புதுடில்லியில் வைத்துக் கடத்தப்பட்ட ருமேனிய இராஜதந்திரி விகராடு முகமூடியணிந்த இருநபர்களோடு இருக்கக் காணப்படும் புகைப்படம் ஒன்றும், இருபக்க கடிதம் ஒன்றும் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது.

காலிஸ்தான் விடுதலைப் படையினரால் அனுப்பப்பட்டிருக்கும் இத் தகவலில் முன்னாள் இராணுவத் தளபதி வைத்தியாவின் கொலையில் சம்பந்தப்பட்டவர்களென சந்தேகிக்கப்படுவோர் விடுவிக்கப்படல் வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது

# தூதுவரை மீட்க பாக். இடம் ருமேனியா உதவி கோரல்

புதுடில்லியில் வைத்துக் கடத்தப்பட்ட ருமேனிய இராஜதந்திரியை மீட்கும் முயற்சியில் உதவுமாறு ருமேனிய அரசு பாகிஸ்தானைக் கேட்டுள்ளது இத்தகவலை இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை நேற்று வெளியிட்டது.

# கே. ஜி. பி. கலைப்பு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் இரகசிய உளவு அமைப்பான கே. ஜி. பி. கலைக்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக சுதந்திரமான மத்திய புலனாய்வுப் பிரிவும், குடியரசுக்களுக்கிடையிலான எதிர் புலனாய்வு பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது

## மாத

தாசா அதிருப்தியாளர்களும் கொண்டு வர இருக்கும் இத் தீர்மானம் ஜனாதிபதியின் தன்னிச்சையான ஏதேச்சதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் என்று தெரியத்தந்துள்ளதாக பி. பி. சி. தெரிவித்துள்ளது.

# தனியார் லொறி உரிமையாளர் கருத்தரங்கு

தனியார் லொறி உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 18-10-91 வெள்ளிக்கிழமை 9-00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலகத்தில் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினரால் நடாத்தப்படவுள்ளது எனவே இக் கருத்தரங்கில் சகல தனியார் லொறி உரிமையாளர்களையும் கலந்து கொள்ளும்படி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு லொறி உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்கிறது

யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

மாங்குளம் தகர்ப்பு

கண்டது காலனின் வாயிலில். ஆயினும் உன் கதை முடிந்ததல்ல தொடருகிறது. உன் கதை பூவுலகம் இருக்கும் வரையும் வாழ்ந்துகொண்டே இருக்கிறாய்.

குடும்பத்தினர்
நண்பர்கள்

(B/3311)


# 3-ம் ஆண்டுநினைவஞ்சலி

| விரஜனனம் | | விரமரணம் |
|---|---|---|
| 30 - 05 - 1969 | | 13 - 10 - 1988 |



## கப்டன் கரிகாலன்
### (பொன்னம்பலம் கௌரிபாலன்)

''நெடுநேரத்து எதிர்ப்போர் முடியும்
விடுதலைப் போரில் நாம் தனித்திடல் இல்லை.
வீழ்ந்த நீயும் உன் தோழர்களும் உயிர்த்தெழுவீர்கள்
எம் தாய் மண்ணும் கடலும் எம் வரலாறும்
துணைவரும் கரிகாலா''

உன் நினைவில் வாழும்
பெற்றோர், சகோதரர்
நண்பர்கள்

வரணி வடக்கு,
வரணி

(R/1819)

சபாநாயகர் வாக்கெடுப்பு நடைபெறும்.

சபாநாயகருக்கானபோட்டியில் ஆளும் கட்சியின் வேட்பாளர் இரகசிய வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது உறுதியல்ல என்று ஆளும்கட்சி நம்புவதால் சபாநாயகர் எம். எச். முகமட் இராஜினாமாச்செய்ய மாட்டார் என்று சிலர் கருதுகிறார்கள்.

கொட்ஸ்பிறிங் சேவையைப் பூரணமாக நிறைவு செய்து இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்இவ்வாரப்பத்திரிகை வடபகுதியில் இருந்து வெளிவரும் ஒரேயொரு ஆங்கில செய்திப்பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத் தேர்தல் வைகளால் அங்கு தேர்தல்களை நடாத்த முடியாது. இனப் பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்குத் துரிதமாகப் பரிகாரம் ஒன்றைக் காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றைநியமிக்கச்சகல எதிர்க்கட்சிகளும் இணங்கியுள்ளன. எல்.ரீ.ரீ ஈயினரைத் தனிமைப்படுத்துவதற்கும் இக்குழுதுரிதமாகப் பரிகாரம் ஒன்றைக் காணும் என நான் நினைக்கிறேன் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

நீதிமன்றத் தொடர்ந்து பல பொதுக் கூட்டங்களில் ஜனாதிபதியை நாம் விமர்சித்தோம். இப்பொழுது ஜனாதிபதியின் தலைமையின் கீழ் எப்படி இணைவது? எம்மைப் பற்றி மக்கள்என்ன நினைப்பார்கள்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இன்றார்கள். இத்தகைய குறைகளுக்கு அவர்களும் ஒரு வகையில் காரணம் என்பதை உணர்ந்துகொள்ளவில்லை.

உதாரணமாக எரித்திரியாவை எடுத்துக்கொண்டால் அங்கு பெரும் நிலப்பரப்பை போராளிகளே கட்டுப்படுத்துகிறார்கள், அவர்களோடு டாக்டர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பல கல்விமான்கள் கூடவே இருந்து போராடுகிறார்கள். அத்தகைய சூழல் தோன்றவேண்டும். பதவிகளையும், அந்தஸ்துகளையும் எதிர்பாராமல் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வர வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.


# மாங்குளம் தகர்ப்பு
(விவரணப் படம்)

# இனியொரு விதி
(குறும்படம்)

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்)
சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/8203)


# உதயம் இசை நாடா வெளியீடு

எமது நிதர்சனம் நிறுவனத்தின்
எட்டாவது தயாரிப்பான
உதயம் இசை நாடா வெளியீடும்
அதனைத் தொடர்ந்து அதே கலைஞர்களால்
இசைக்கப்படும் இசை நிகழ்ச்சியும்
இடம் பெறும்

- யாழ். இந்துக் கல்லூரி
- 1991. 10. 13 இன்று ஞாயிறு
- காலை 10 மணிக்கு
- குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்

''நிதர்சனம்''
தமிழீழம்.

(B/3315)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.